## பதியத்தலாவ பிரதேச சபை
## அம்பாறை மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 10 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும், விரிவான முகாமைத்துவ அறிக்கையும் 2020 மே 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பதியத்தலாவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 54,353 தொகையான நூலக புத்தகங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சகல நூலக புத்தகங்களும் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டில் நகர திட்டமிடல் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட 02 வேலைகளுக்காக கடன் கொடுத்தோர் நிதி ஏற்பாடு ரூபா 80,258 மேலதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதிக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (iii) | மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 654,357 தொகைக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகளை தயாரித்தல் வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (I) ரூபா 686,493,878 தொகையான 02 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 5,667,769 தொகையான 02 பொறுப்பு விடயங்கள் என்பவற்றின் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது |
| (ii) நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 632,440,853 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள், ரூபா 1,581,500 தொகையான இயந்திர உபகரணங்கள் மற்றும் ரூபா 3,947,182 தொகையான தளபாடங்களும், பொருத்திகளும் என்பவற்றிக்காக பட்டோலைகள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களுக்காக பட்டோலைகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது பட்டோலைகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். . |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம். | | | |
| 126 ஆம் பிரிவு | கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான உப விதிகளை விதித்து செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். எதிர்காலத்தில் உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி மற்றும் கொள்கை ஏற்பாடுகள் | | | |
| | விதி 217 | பிரதேச சபைக்கு சொந்தமான மற்றும் பிரதேச சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற காணிகளை கையேற்று நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. | பிரதேச சபை விதி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.08.08 ஆம் திகதி மட்டக்களப்பு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் உரிய மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் உள்ளடக்கப்படும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | 04 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 யூன் மாதம் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,083,263 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,081,847 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 231,000 | 205,500 | 205,500 | - | 171,000 | 198,105 | 198,105 | - |
| (ii) | வாடகை | 6,892,000 | 4,960,497 | 4,541,449 | 937,488 | 7,634,574 | 5,104,426 | 4,635,486 | 518,440 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 502,000 | 430,060 | 430,060 | - | 959,000 | 269,750 | 269,750 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,247,912 | 2,339,949 | 2,186,449 | 1,129,454 | 2,826,573 | 2,508,167 | 1,568,461 | 975,954 |
| | | 10,872,912 | 7,936,006 | 7,363,458 | 2,066,942 | 11,591,147 | 8,080,448 | 6,671,802 | 1,494,394 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

**முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகார தரப்பினரிடமிருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 787,940 ஆகும். | நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 893,672 தொகையில் ரூபா 105,732 தொகை பெறப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான 30 பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 இம் திகதி வரையில் உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்படாத பணிகளுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | 05 விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்தை பெறுவதற்காக பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு வருடத்திற்காகவும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 1998 ஆம் ஆண்டு முதல் நிரந்தர அடிப்படையில் சேர்க்கப்பட்ட 05 வீதித் தொழிலாளர்களும் அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஒரு வீதி தொழிலாளியும் உரிய கடமையில் ஈடுபடுத்தப்படாமல் ஏனைய கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சேர்க்கப்படுகின்ற தொழிலாளர்கள் பதிவிகளுக்குரிய கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | எமது சபைக்கு சொந்தமாக போதியளவான வருமானம் ஒன்று இல்லாமையினால் புதிய ஊழியர் ஒருவரை சேர்க்கும் போது அவர்களின் படிகள் சபையின் வருமானத்தின் அடிப்படையில் செலுத்துவதற்கு ஏற்படுகின்றமையினால் இது வரையிலும் அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஊழியர்கள் தற்காலிகமாக உரிய கடமையில் ஈடுபடுத்தப்படாமல் ஏனைய கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| (ii) பிரதேச சபையினால் கழிவுப் பொருள் அகற்றும் காணிக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் அகற்றப்படும் காணிக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பப் படிவம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் பௌதீக பரிசோதனையின் பின்னர் பரிந்துரையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவித்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக அறிவித்து இலக்குகள் நோக்கங்கள் இனங்காணப்பட்டு ஸ்தாபிக்கப்பட வேண்டும். | அறிவிக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட் 03 கடைகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடைகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடைகளை மதிப்பீடு செய்வதற்காக 2019 ஆம் ஆண்டில் 03 சந்தர்ப்பங்களின் போது கோரப்பட்டிருந்த போதும் மதிப்பீடு இது வரையிலும் கிடைத்திருக்கவில்லை. |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியில் 05 பதவிகளுக்காக 06 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினரின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | ஊழியர் வெற்றிடங்களின் விபரங்கள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் இது வரையிலும் ஊழியர்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | சபையில் சேவையாற்றி இடமாற்றலாகிச் சென்ற, ஓய்வு பெற்றுச்சென்ற மற்றும் மரணமடைந்த 03 உத்தியோகத்தர்களிடம் இருந்து நீண்ட காலமாக அறவிடவேண்டிய ரூபா 138,274 நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்படாது காணப்படுகின்ற ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை பயன்படுத்துகின்ற 07 வாகனங்களின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் சட்ட ரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட வேண்டும். | சபைக்குரிய 07 வாகனங்களை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. |

**3.4.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைக்குச் சொந்தமான 07 கடைகளில் இருந்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கு இணங்க பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |